தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சட்ட மன்ற மேலவையின் ஐம்பத்தி நான்காவது கூட்டத் தொடர்.

வியாழக்கிழமை, 1978 ஆகஸ்ட் 31.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் காலை 10-30 மணி அளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (திரு ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. புதிய அமைச்சர்களுக்கு வரவேற்பு

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களே, மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராசன், மாண்புமிகு திருமதி எஸ். டி. சுப்புலட்சுமி ஆகிய புதிய அமைச்சர்கள் முதன்முதலாக இந்த அவையின் நடவடிக்கைகளில் கலந்து கொள்வதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்.

இதுவரையில் சட்ட மன்ற மேலவையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அமைச்சர்களாகப் பதவி வகிக்கிறார்கள். இந்த அவையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தற்போது அதிகமான அளவில் அமைச்சர்களாக இருப்பதற்கு தமிழக முதலமைச்சர் மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் பெருந்தன்மைதான் காரணம். ஆகவே அவருக்கு இந்த அவையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அமைச்சர்களுக்கு வரவேற்பு கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

2, இரங்கற் குறிப்புகள்.

மேலவை முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் ஏ. வி. பனேஜிராவ், எம். எம். பக்கர், டி. எம். நாராயணசுவாமிப் பிள்ளை, ஜார்ஜ் கோமகன் ஆகியோர் மறைவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலவை முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் ஏ. வி. பனேஜி ராவ், எம். எம். பக்கர், டி. எம். நாராயணசுவாமிப் பிள்ளை, ஜார்ஜ் கோமகன் ஆகியோர் முறையே 26–4–1978. 3-5-1978, 23-5-1978, 14-8-1978 அன்று இயற்கையெய்தினர் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. வி. பனேஜி ராவ் அவர்கள் 1926 முதல் 1937 வரை தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் உறுப்பினராகவும், நீதிக் கட்சியின் பிரதம கொரடாவாகவும் இருந்தவர்.

திரு. எம். எம். பக்கர் அவர்கள் 1972 முதல் 1978 வரை இம் மேலவையின் உறுப்பினராக இருந்தவர். அவர் மேலவை விவாதங்களில் பங்குகொண்டு அமைதியாக தமது கருத்தை நல்ல தமிழில் எடுத்துச் சொல்வதில் வல்லமை காட்டி வந்தவர். மேலவை, பேரவைக் குழுக்களில் நல்ல முறையில் பணியாற்றியவர்.

திரு. டி. எம். நாராயணசுவாமிப் பிள்ளை அவர்கள் 1924 முதல் 1935 வரையும், மறுபடியும் 1953 முதல் 1958 வரையும் தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையில் உறுப்பினராக இருந்தவர். அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராக விளங்கி கல்வித் துறையில் திறம்படப் பணியாற்றியவர். கூட்டுறவுத் துறையில் ஈடுபாடு கொண்டு அத்துறையில் நல்ல பல பணிகளைப் புரிந்தவர். தமிழ் இசைச் சங்கத் தொடக்கக் காலத்திலிருந்து அதன் உறுப்பினராகவும், தலைவராகவும் இருந்து நற்பணியாற்றி தமிழ் இசை வளர்ச்சிக்குத் தொண்டாற்றினர்.

திரு. ஜார்ஜ் கோமகன் அவர்கள் 1972 முதல் 1978 வரை தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் உறுப்பினராக இருந்தவர். அவர் இனிமையாக எல்லோரிடமும் பழகக்கூடியவர். அவர் தமிழில் பல நூல்களை எழுதித் தமிழுக்காகத் தொண்டாற்றியவர்.

அவர்களது மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்திற்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

3. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

Sharing of Idukki Hydro-Electric Power.

*1 Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the year in which the validity of the agreement for sharing of surplus of Idukki Hydro-Electric Power between Tamil Nadu and Kerala, will expire ; and

(*b*) the steps that are being taken now to extend the validity of the agreement ?